**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4380/ஆ5/2024, நாள்.07/11/2024**

•••••

பொருள் : பள்ளிக் கல்வி – தேசிய மக்கள் தொகை கல்வித் திட்டம் – வளரிளம் பருவக் கல்வி தொடர்பான பங்கேற்று நடித்தல் (Roleplay) போட்டி நடத்துதல் – அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர் பங்குபெற தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை :
1. சென்னை, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.20643 /ஜி3/2024, நாள். 24.10.2024 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள். 29.10.2024)
2. இராணிப்பேட்டை, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரின் கடித ந.க.எண்.512/ அ2/2024, நாள். 04.11.2024

•••••

பார்வை 1–ல் காணும் செயல்முறைகள் மற்றும் பார்வை 2–ன் கடிதத்தில், 2024–2025–ம் கல்வியாண்டில் வளரிளம் பருவக் கல்வி சார்ந்த பங்கேற்று நடித்தல் போட்டி (Roleplay) அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9–ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு நடத்தப்படுகிறது.

வளரிளம் பருவக் கல்வி சார்ந்து பங்கேற்று நடித்தல் (Roleplay) போட்டியினை பள்ளி அளவில் கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் நடத்தப்பட வேண்டும். பள்ளி அளவில் முதலிடம் பெறும் அணியினை மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்க செய்தல் வேண்டும்.

**<u>போட்டிகளுக்கான கால அட்டவணை –</u>**

பங்கேற்று நடித்தலுக்கான நேரம் 5–6 நிமிடங்கள் மட்டும்.

| போட்டிகள் | நாள் | இடம் |
|---|---|---|
| பள்ளி அளவில் | 12.11.2024–க்குள் (செவ்வாய் கிழமை) | அந்தந்தப் பள்ளிகள் |
| மாவட்ட அளவில் | 22.11.2024–க்குள் | அந்தந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் அல்லது ஏதேனும் ஒரு அரசு பள்ளியில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (விவரம் பெறப்பட்டவுடன் தெரிவிக்கப்படும்) |
| மாநில அளவில் | 27.11.2024 | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் , திருச்சிராப்பள்ளி தெரிவு செய்யும் ஒரு மையம் |
| தேசிய அளவு | ஜனவரி 2025 | NCERT புதுடெல்லி |

பங்கேற்று நடத்தல் போட்டி கீழ்காணும் ஐந்து தலைப்புகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சூழ்நிலைகளில் நடத்தப்பட உள்ளது–

1. ஆரோக்கியமான வளர்த்தல்
2. சத்தான உணவு மற்றும் உடல்நலம்
3. தற்பாதுகாப்பு (உடல் மனம் மனஎழுச்சி மற்றும் பாலியல்)
4. இணையம், மின்னியக் கருவிகள் மற்றும் ஊடகங்களை பாதுகாப்பாக பயன்படுத்தல்
5. போதைப் பழக்கத்தின் காரணமும் தடுப்பும்,

பள்ளிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் கீழ்காணும் படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. பங்கேற்று நடித்தல் போட்டி அரசுப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மட்டும் நடத்தப்படவேண்டும்.
2. இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து, தலைமையாசிரியரால் நியமிக்கப்பட்ட ஆசிரியரின் உதவியுடன் உரையாடல்கள் தயார் செய்து மாணவர்களுக்கு பயிற்சி பெற வேண்டும்.
3. சூழ்நிலையில் கொடுக்கப்பட்டுள்ள பாத்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ குறைக்கவோ கூடாது.
4. இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவிகள் சிறப்பு உடைகள் அல்லது அலங்காரம் ஆகியவற்றை கண்டிப்பாக தவிர்த்து, தங்கள் பள்ளிச் சீருடையிலேயே பங்கேற்று நடிக்க வேண்டும். பங்கேற்று நடித்தலின்போது மாணவர்கள் எந்தப் பொருளையும் பயன்படுத்தக் கூடாது.
5. பள்ளிகள் பங்கேற்று நடித்தல் போட்டியை அந்தந்தப் பள்ளிகளில் நடத்தி மிகச் சிறந்த ஓர் அணியினை மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள ஆசிரியரின் துணையுடன் தலைமையாசிரியர் அனுப்பி வைக்க வேண்டும். அதே போன்று ஒன்று அல்லது அதற்கு மேலும் ஒரு ஆசிரியர் துணையுடன் பாதுகாப்புடன் மாநில அளவிலான பங்கேற்று நடித்தல் போட்டியில் சார்ந்த மாணவர்கள் கலந்து கொள்ள வேண்டும்.
6. மாநில அளவிலான போட்டி நடத்திடும் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தால் வெளியூரிலிருந்து மாநில அளவிலான போட்டியில் பங்கேற் வருகை புரியும் மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தங்கும் வசதி (Refresh) செய்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
7. மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காக பயணப்படி வழங்கப்படமாட்டாது.
8. மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களுக்கு இரயிலில் இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி / தமிழ்நாடு அரச போக்குவரத்துக் கட்டணம் மாநில அளவிலான போட்டி நடைபெறும் மையத்தில் வழங்கப்படும்.

பள்ளி அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு முதலிடம் பெறும் அணிகள் மாவட்ட அளவில் கலந்துக் கொள்ள ஏதுவாக அதன் விவரத்தினை dietvlr@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்கள் பள்ளி மாவட்ட அளவில் போட்டியில் பங்கேற்கும் என்ற விவரத்தை அனுப்புமாறு அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வையில் காணும் கடித நகல்

07.11.24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

நகல்–
1. சென்னை, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. இராணிப்பேட்டை மாவட்டம். மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம்,
(தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படுகிறது.)